# வழிகாட்டி

இலக்கு 01
சுவடு 01
ஆடி 2012

உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் மாத இதழ்

இலவச சஞ்சிகை

## உயர்கல்வி உலகின் நவீன பரிமாணம்

– தெளிவான பார்வையில் தொழிற்கல்வி.



## இந்தியாவில் உயர்கல்வி

– ஓர் முழுமையான அலசல்

## காலா செருப்பா?

– கல்வியின் அவசியம் என்ன?


## முயற்சிப்போம்...

வறுமையான தேசத்தின் வலுமிக்க இளைஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SONA
## College of Technology
சேலம், தமிழ்நாடு.





**Best Indian Engineering Award - 2011**



- இலங்கையிலும், உலகெங்கும் சிறந்த ஊதியத்துடன் உடனடி வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் துறைகள்.
- எம்மூடாக தற்போது 50ற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கின்றார்கள்.
- கடந்த காலங்களில் SONA இல் கல்வி கற்ற எமது மாணவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நிறைந்த ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்.

### HOSTEL FACILITIES
- Separate for Boys & Girls
- Separate room for every one
- Attached bathroom
- A/C Facilities
- Internet facility (wi-fi)
- Veg food facilities
- In - Campus Hostel


**Eligibility : A/L 3 Pass.**



### COURSES
- Civil Engineering
- Mechanical Engineering
- Computer Science & Engineering
- Electrical & Electronics Engineering
- Electronic & Communication Engineering
- Information Technology

சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற கல்வித்தகுதி

- 2011 ஆம் ஆண்டுக்கான இந்தியாவிலேயே "மிகச்சிறந்த பொறியியல் கல்லூரி" விருதினை பெற்ற கல்லூரியாகும்.
- பல்வேறு கட்டுமாணப்பணிகள் இடம்பெறும் இலங்கையின் 100% வேலை வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கக்கூடிய CIVIL ENGINEERING பொறியியல் கல்வியினை வழங்கும் கல்லூரி.
- 2012 ஆம் ஆண்டிற்கான பொறியியல் கற்கை நெறிகளுக்கான உடனடி அனுமதிகள் (SPOT ADMISSIONS) ஆரம்பமாகி விட்டன.
- கல்லூரி ஆரம்பம் 05-08-2012 ஆயினும் 05-09-2012 வரையிலும் இலங்கை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.
- 2012 இல் A/L பரீட்சை எழுதிய மாணவர்களும் PENDING RESULTS அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.



உடனடி அனுமதிகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் :

## V4 EDUCATIONAL CONSULTANCY
Catalyst for your higher studies

இல 23, நவீன சந்தை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.
கிளைகள் : யாழ்ப்பாணம், நெல்லியடி.

0773867257, 0774836084.
Web : www.v4edu.com E-mail : mail@v4edu.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி

இரு வழித் தகவல் பரிமாறி

## வணக்கம் வாசகர்களே!

காலம் மாறிக்கொண்டிருக்கின்றது. தேவைகள் மாறிக் கொண்டிருக்கின்றது. பேனாவை உள்ளே விட்டுச் சுற்றிப் பாட்டுக்கேட்ட சிக்கல் பிடித்த ஒலிநாடா (டேப்) இன்று இல்லை. தட்டச்சு இயந்திரம் உற்பத்தி செய்த கடைசி நிறுவனமும் பூட்டப்பட்டு விட்டது. அப்போ நாங்கள் எங்கு நிற்கின்றோம்? முன்பெல்லாம் தசாப்தத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இன்று நாட்கணக்கில் நடக்கின்றன. மொத்தத்தில் எல்லாம் மாறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் நாம்??

எவ்வளவு தொழில் வாய்ப்புக்களும், கற்கைநெறிகளும் புதிதாய் உருவாகி செல்வாக்குச் செலுத்துகின்ற போதும் இன்னமும் பழைய மாதிரியே மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக அனுமதிகளுக்கும், அரசாங்கத் தொழில்களுக்கும் கூட்டம் கூட்டமாய் அலைந்துகொண்டிருக்கின்றோம். வளர்ந்த நாடுகளில் கூட கல்விக்குப் பணம் செலுத்த வேண்டி இருக்கின்ற போது பாடசாலைக் கல்வியினை முற்று முழுதாக இலவசமாகத் தருகின்ற அரசாங்கம் பல்கலைக்கல்வியினையும் எல்லோருக்கும் இலவசமாக தருவது சாத்தியமா? இல்லை எதிர்பார்ப்பது தான் நமக்கு அழகா? அளவிடமுடியாத அறிவையும் திறமையையும் உடைய எமது இளைய செல்வங்களின் எதிர்காலத்தினை வளமாக்கவேண்டிய அவசியம் எல்லோருக்கும் உண்டு. அந்த வகையில் வழிகாட்டியினது பங்களிப்பும் அவசியமானதாகும்.

வழிகாட்டியானது ஊடகத்துறையில் அனுபவமற்றவர்களோடும் மிகக்குறைந்த வளங்களோடும் சமுதாயத்தின் அவசியம் கருதி வெளிவருகின்றது. எமது ஆக்கங்களில் நிறைவு இருப்பின் மனதாரப் பாராட்டுங்கள், குறைகள் இருப்பின் குட்டி உணர்த்துங்கள்.



வழிகாட்டி உங்களின் குழந்தை. அரவணைத்தும் அடித்தும் வளர்ப்பதுமே ஆரோக்கியமான வளர்ச்சியின் வெளிப்பாடு. இலவச இதழான வழிகாட்டியின் நோக்கம் அனைத்து மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் பெற்றோர்களிடமுமாக எல்லோரிடமும் போய் சேர்வதுதான். இது வரைக்கும் தெரியப்படுத்துபவர்கள் விளம்பரங்கள் மூலமாகவோ அல்லது கட்டுரைகள் மூலமாகவோ தெரியப் படுத்துவார்கள். அதை எல்லோரும் பார்ப்பார்கள் ஆனால் குறிப்பிட்ட விளம்பரத்தில் அல்லது கட்டுரையில் உள்ள தகவல் போய்ச்சேர வேண்டிய எல்லோரும் பார்ப்பார்களா என்பது ஐயம்தான். ஆனால் வழிகாட்டியைப் பொறுத்தவரை இளைய தலைமுறையினருக்குக் குறிப்பாக மாணவர், வேலைதேடும் வயதினரை மையமாக வைத்து அவர்களின் அனைத்து வகையான சந்தேகங்களையும், தேடல்களையும் தெரியப்படுத்துபவர் களிடமும், வழங்குநர்களிடமும் கொண்டு சேர்ப்பதன் மூலமும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை நோக்கிய சேவைகளினை வழங்கும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றின் தகவல்களினை விளம்பரங்கள் மற்றும் கட்டுரைகளாகக் கொண்டு செல்வதன் மூலமுமாக ஓர் இருவழித் தொடர்பு ஊடகமாக செயல்படுகிறது. இதன் மூலம் வழிகாட்டியானது இளம் சமுதாயத்தின் இன்றியமையாத துணைவனாக என்றும் தொடர அனைத்து தரப்பினரின் பேராதரவையும் வேண்டி நிற்கின்றான்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி
இலக்கு 01 சுவடு 01

வெளியீடு :

ஏடு பதிப்பகம்
யாழ் வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர் :

சிவரட்ணம் சாரூபன்

வழிகாட்டி குழும உறுப்பினர்கள் :
ஆ. தீபன்
ஞா. அபிமன்யு
சி. ஜெயகாந்
வி. விசாந்தினி
அ. மேரி டிஸ்னா

வடிவமைப்பு :
அஸ்மிகா டிசைன்ஸ்
0776455060

றோசலீன் மாறி இரட்ணசோதி

அச்சகம் :
குரு பிரிண்டேர்ஸ்
திருநெல்வேலி

தொடர்புகளுக்கு :

வழிகாட்டி,
யாழ் வீதி, வல்வெட்டி,
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

Tel : 077 66 97960
E-mail : info@valikaatti.com
editor@valikaatti.com

விளம்பரத் தொடர்புகளுக்கு :

Tel : 077 66 97960
E-mail : advt@valikaatti.com

சந்தா தொடர்பான விபரங்களுக்கு :

Tel : 077 66 97960

## அலங்கரிப்பவை...

காலா... செருப்பா...
சிந்திக்க சில வினாடிகள்...

முயற்சிப்போம்
வறுமையான தேசத்தின் வலுமிக்க இளைஞன்...

இந்தியாவில் உயர்கல்வி
ஓர் முழுமையான அலசல்...

உயர்கல்வி உலகின்
நவீன பரிமாணம்
அவசியமானது...

வழிகாட்டியில்
உங்களின் பங்களிப்பு

What career
is right for my child?

வாசகர்களுக்கான
வேண்டுகோள்

SPECTRA
Challenge

அடுத்தது என்ன
செய்வது?

பக்குவம்

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத்தன்மை, கட்டுரையாளர்களின்
கருத்துக்களுக்கு "வழிகாட்டி" நிர்வாகம்
பொறுப்புடையதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலா... செருப்பா...



சிந்திக்க சில வினாடிகள்...

வணக்கம் உறவுகளே!...

**ஒரு** சமுதாயத்தின் முன்னேற்றம் ஒவ்வொரு இளைஞனிடத்தும் யுவதியினிடத்தும் தங்கியுள்ளது. இவர்களின் நிகழ்காலம் சரியாகச் செப்பனிடப்படுமிடத்து அவர்களினதும் சமுதாயத்தினதும் எதிர்காலம் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

நீண்டகால வித்தியாசத்தில் பின்னிற்கும் எங்களுக்கு, மிக நீண்ட காலமாக பல்வேறு இன்னல்கள் காரணமாக எங்களுக்கு எம்மைச்சூழ வெளியுலகில் ஏற்படும் மாற்றங்கள், நடைமுறைகள் எம்மில் பலருக்குத் தெரியாமலும் பலருக்கு புரிந்துகொள்ள முடியாமலும் இருக்கின்றன.

இதன் காரணமாக எம்மால் எம்மைச்சுற்றி உருவாகி இருக்கின்ற கல்வி, பொருளாதார சூழ்நிலைகளை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. அத்தோடு எம்மைச்சுற்றி குவிந்து கிடக்கும் மற்றும் புதிது புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் எண்ணற்ற வாய்ப்புக்களை பயன்படுத்த தெரியாமல் நெடுங்காலமாக சமூகத்தால் பாராட்டப்பெற்ற, மதிப்பு பெற்ற குறித்த சில துறைகளில் வேலையை அதுவும் மிகவும் போட்டியின் மத்தியில் பெற்றுக்கொள்வதற்காக போட்டி போடவேண்டிய பரிதாப நிலைமை எமக்கு.

**காலுக்கு அளவாக செருப்பு வாங்குவதா?**
**இல்லை செருப்புக்கு அளவாக காலை வெட்டுவதா?**

என்ன ஆச்சரியமாய் இருக்கின்றதா? இதுதான் இன்றைய எம் மாணவர்களினதும் பெற்றவர்களினதும் வழிகாட்டுபவர்களினதும் நிலைமை.

சின்னஞ்சிறு வயதில் இருந்து நன்றாகப் படிக்கும் மாணவன் O/L இல் நல்ல பெறுபேற்றினை ஈட்டும் மாணவன் A/L இல் சித்தியடையத் தவறுவது அல்லது எவ்வளவு முயன்றும் திறமைச் சித்திகளை ஈட்டமுடியாமல் இருப்பதும் A/L இல் நல்ல பெறுபேற்றினை ஈட்டியும் அதன் பின்னர் வாழ்க்கையில் பிரகாசிக்க முடியாமல் இருப்பதும் ஏன் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றும்கூட நல்ல ஒரு வேலையினை தேடிக்கொள்ள முடியமலும் இருப்பதற்கு என்ன காரணம்?

மாணவர்களின் நிலைமை இப்படி என்றால் பெற்றவர்களின் நிலைமை இன்னும் மோசம். பிறந்தது முதல் இன்று வரை கண்ணும் கருத்துமாக தங்கள் கஸ்ரங்களை பிள்ளைகளுக்குக் காட்டாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு சிறு வருத்தமென்றாலே துடித்துப்போய் அவர்களின் ஒவ்வொரு தேவைகளையும் பார்த்து பார்த்து வளர்க்கும் பெற்றோர் அவர்கள் பாடசாலைக்கல்வியை முடிக்கும் தருணங்களில் அடுத்த அவர்களது எதிர்காலம் பற்றி முடிவெடுப்பதில் திணறிப்போகின்றார்கள்.

இவர்களைவிட மாணவர்களுக்கு, பெற்றோர்களுக்கு மாணவர்களின் எதிர்காலம் பற்றி ஆலோசனை வழங்குபவர்களது கணிப்பு தவறாகுமிடத்து அதன் பெறுபேறு என்னவாகும் என்பது பாரதூரமான விடயம்...

**“நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ”**

என்னும் பாரதியின் வாக்கு இங்கு சாலப்பொருந்தும். சரி இதற்கு என்ன செய்யலாம்? எங்கு தவறு நடக்கின்றது? நாம் நன்றாகத்தானே படிக்கின்றோம்? நாம் நன்றாகத்தானே பிள்ளைகளை படிக்க வைக்கின்றோம்? இப்படியிருந்தும் அவர்களால் தமக்கான எதிர்காலத்தை சீராக அமைத்துக்கொள்ள முடியவில்லையே?

சரி மீண்டும் தலையங்கத்துக்கே வருவோம்.....

காலுக்கு அளவாக செருப்பு வாங்குவதா?

இல்லை செருப்புக்கு அளவாக காலை வெட்டுவதா?

படிப்பிற்கும் செருப்பிற்கும் என்ன பொருத்தம் என யோசிக்கின்றீர்களா? சரி இப்போ பாருங்கள் கொஞ்சம் விளங்கும்.

எமக்குப் பொருத்தமான கல்வியை தெரிவு செய்வதா? இல்லை கல்விக்கு பொருத்தமாய் எங்களை மாற்றிக் கொள்வதா?

எமக்கான விருப்பம், திறமை, இயல்பான ஈடுபாடு, எமக்கே உரித்தான தனித்துவம் போன்ற காரணிகளை பொருத்திப் பார்த்து எதிர்காலத்தில் இந்த தொழில் செய்தால் எமக்கு சந்தோசமாகவும் பொருத்தமாகவும் அத்தோடு எமது வாழ்க்கையில் ஈடுபாட்டுடன் முன்னேற்றங்களை காணலாம் என்று உணர்ந்து அதற்குரிய கல்வியினை தெரிவு செய்தல் நல்லதா?

அல்லது

இந்தக் கல்வியினை கற்றால் இவ்வளவு சம்பாதிக்கலாம், சமூக அந்தஸ்தினை பெற்றுக்கொள்ளலாம் மற்றவர்கள் குறித்த கல்வியை பயின்றதனால் நன்றாக சம்பாதிப்பதால் நாமும் அதையே பின்பற்றலாம், என்று எமக்கு பொருந்தாத கல்வியை தொடர்ந்து ஒன்றில் அதை பூரணமாக நிறைவு செய்ய முடியால் விட்டு அல்லது அதை பூரணப்படுத்தியும் வேலை கிடைக்காமல் அல்லாடுவது நல்லதா?

எது எவ்வாறாயினும் எமக்கு விருப்பமானதும் பொருத்தமானதுமான கல்வி கிடைக்குமாயின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

-வழிகாட்டி

இக்கன்னி இதழான “வழிகாட்டி” யை ஊக்குவிக்கவும், மாணவர்களின் நன்மைகளையும் கருதி தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம்.

- ஆசிரியர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சிப்போம்



உற்சாகத் தொடர்

"எங்கள் இளைஞரில் அனேகமானோர் படித்து விட்டு தங்களின் படிப்புக்கேற்ற வேலை கிடைக்காவிடின் சும்மா இருப்பதை அறிந்திருக்கிறோம். அப்படி இருக்கக் கூடாது என்று "வழிகாட்டி" விரும்புகிறான், விரும்பவில்லை என்று வெறுமனே சொல்லி விட்டு இருக்காமல் அப்படி இருக்காத கென்ய விவசாயி ஒருவரின் கதையை உங்களுக்காக எடுத்துத் தருகிறான். என்ன தான் பொறியியல் துறை, மருத்துவத் துறை, கணனித் துறை என்று எம்மவர்கள் வேலை தேடினாலும் கடைசியில் சோறு போடப் போவது என்னவோ விவசாயத் துறை தானே. இவ்வாறாகக் கென்ய விவசாயியின் எண்ணத்தில் வந்த மாற்றம் இதைப் படிக்கும் யாராவது ஒருவரையாவது சிந்திக்கத் தூண்டினாலே அது வழிகாட்டிக்குக் கிடைத்த வெற்றி தான்."


*E.K.* கம்வென்ஜி கென்யாவின் நயேறியை வதிவிடமாகக் கொண்டவர். இவர் இணையத்தைப் பயன்படுத்தி பண்ணைப் பணியிலீடுபடும் ஒரு விவசாயியாவார். இவர் பண்ணை உற்பத்திகளை விற்பனை செய்வதில் அண்மைக் காலத்தில் வெளிப்பட்ட வலையமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளைப் பயன்படுத்துவதன் முக்கியத் துவத்தை அறிந்து கொள்வதற்கு முன்னர் விவசாயத்துடன் தொடர்புபடாத வேறு பல வேலைகளைச் செய்திருக்கிறார்.

இவர் தனது வேலைச் சுற்றோட்டம் எவ்வாறு பண்ணை விவசாயத்தில் வந்து நின்றது என்பதை விளக்குகிறார்.

நான் ஒரு தொழில்சார் விவசாயி. நான் நான்கு வருடங்கள் இளநிலைப் பட்டப்படிப்பை முடித்து, பின்பு ஒரு வருட சிறப்புக் கற்கையுடன் பட்டதாரியாகினேன். இதன் பின்னர் நான் தொழில் வேட்டையில் இறங்கினேன். முதலாவதாக, நான் சிறிய பண்ணையொன்றில் பணிக்கமர்த்தப்பட்டேன். அங்கு நான் உற்பத்திகளுக்கான பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டேன். ஆரம்பத்தில் எனக்கு உறுதியளிக்கப்பட்டதற்கு மாறாக மிகக் குறைந்தளவு வேதனம் வழங்கப் பட்டதனால் பதினான்கு மாதங்களில் இவ் வேலையைக் கைவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்களில் நான் இன்னும் கொஞ்சம் கூடுதலாகப் பணம் பார்க்கக் கூடிய வேலையைத் தேடியலைந்தபோதுதான், மரக்கறிப் பண்ணை இல்லாத பிரதேசங்களில் நான் பணியாற்றி முன்னேறலாம் என்பதைக் கண்டுகொண்டேன். வாகனங்களுடன் தொடர்புபட்ட கடை ஒன்றில் விற்பனைகளை மேற்கொள்வது, தகவல் தொழினுட்ப நிறுவனமொன்றில் கணினி மொழிகளை உருவாக்குவது ஆகியன இவற்றுள் அடக்கம். இவ்வேளையிலேயே பொதுவாக



வறுமையான தேசத்திலிருந்து எழுகின்ற ஒரு வலு மிக்க

**இளைஞன்.**

**கென்ய நாட்டு விவசாயி ஒருவரின் பதிவுகள்**

எமதுவிவசாயிகள் சிறியஅளவு உற்பத்திகளிலேயே மூழ்கியிருப்பதைநான் அறிந்து கொண்டேன். இது என்னுள் பல எண்ணங்களை விதைத்தது.

இதன்போதே எனக்கு இன்னுமொரு விடயமும் புலப்பட்டது. அது என்னவெனில், தற்போதுள்ள விடயங்களுக்கேற்ப விவசாயத்தின் ஒவ்வொரு கூறினையும் ஏனைய வியாபார எண்ணக்கருக்களைக் கொண்டு மெருகேற்றி மாற்றியமைக்கும் பல்கூட்டு அமைப்பின் முக்கியத்துவமே அதுவாகும். அதாவது, அண்மையில் வெளிவந்த தொழில் நுட்பப் பொறிமுறைகளினால் பண்ணைத் தொழில் உத்திகளை மேம்படுத்துவதோடு நின்றுவிடாது பண்ணை உற்பத்தியாளர்களையும் உற்பத்திகளையும் வலைப் பின்னலுக்குட்படுத்தி சந்தைப்படுத்தும் வசதிவாய்ப்புக்களையும் ஏற்படுத்திவிடுவதாகும்.



**இணையத்தள விவசாயியாக கம்வென்ஜி எவ்வாறு உருவானார்?**

நான் எனது இந்தப் பாணியிலமைந்த பணியைத் தொடங்கி நீண்டநாட்கள் ஆகவில்லை. பெரும்பாலும் என்னுடைய சவால்கள், மகிழ்ச்சிகள், ஏமாற்றங்கள், தவறுகள், முன்னெடுப்புக்கள் என்பன தொடர்பாக "யாருக்காவது சொல்லுதல்" எனும் ஒரு வகையான ஆற்றுப்படுத்தும் வழிமுறையையே கைக்கொள்வேன். எனது நண்பர்கள் பலர் என்னிடம் எவ்வளவோ முன்னேறக்கூடிய எளிய தொழிற்றுறை வாய்ப்புக்கள் இருக்க என்னை ஏன் இந்த விவசாயப் பண்ணைத் துறைக்குள் இறங்கிச் செயற்படுவதாக வினவினார்கள். நான் பண்ணைத் தொழிலை நேசிக்கிறேன். எனக்கு தன்னம்பிக்கையுடன் செயற்படுவது மிகவும் பிடிக்கும். குறிப்பாக உணவு என்றுவரும்போது மற்றைய எல்லாவற்றையும் விடநான் அதற்குத் தான் முன்னுரிமைஅளிப்பேன். என்னுடைய நண்பர்கள் பணிமனைகளில் மேசைகளில் இருந்தவாறு செய்யும் வேலைகளைக் காட்டிலும் எனக்கு இத்துறையில் எவ்வளவுபின்னடைவுகள் இருந்தாலும்கூட எனதுதொழில்சார் பிராணிகளிலும் பயிர்களிலும் நான் நிறைவைக் காண்கிறேன்.



எனது இந்தப் பணி நான் ஒரு விவசாயி என்ற வகையில் பயணங்களை மேற்கொண்டு சாதிப்பது மட்டுமல்ல கென்யாவில் தொழிலற்று இருக்கும் ஏராளமான இளைஞர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வழி காட்டுவது மாகும். கென்யாவில் பல இளைஞர்கள் வேறுதேசங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லாவிட்டாலும் பலர் வளர்முக நகரங்களுக்கு அலுவலகப் பணிகளுக்காகவும், கடின உடலுழைப்புடன் கூடிய வேலைகளை நாடியும் குடிபெயர்கிறார்கள். இவ்வாறு செல்பவர்களுக்கு இருக்கும் சொந்தமான பண்ணைகளை உழுவதற்குக்கூட ஒருவரும் இருப்பதில்லை என்பது சோகமே.

என்னுடைய இந்தப் பணியினால் ஏனையோரைப்போல எனதுநாளாந்த செயற்பாடுகளுக்குப் பணம் கிடைப்பதில்லைத்தான். ஆனால் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களைக் காட்டும் சுட்டியாக இப்பணி திகழ்கிறது. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட அமைப்பு முறையில் இயங்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னடைவுகளிலிருந்து எவ்வாறு மீண்டெழுவதென்றபடிப்பினைகளையும் தருகின்றது.

நான் நாளாந்தம் தனியாகச் செயற்படுவதனால் எனது வாராந்த வேலையை உடனுக்குடன் திருத்தியோ மாற்றியோ அமைத்துக் கொள்வதற்குக்கூட எனக்குநேரம் கிடைப்பது கடினமே. மாலைநேரங் களில் நான் ஒரு சில விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்வேன். இதனால் நான் மிகவும் பக்குவப்பட்ட நிலையை அடைகின்றேன்.

கம்வெஞ்ஜி கடந்தவருடம் மேற்கொண்ட வேலைத்திட்டங்களில் ஒன்றில், ஒரு வெற்றிகரமான தொழில்சார் மூலதன வேலைத் திட்டத்தை நடாத்திச் செல்வதற்கான தனது திட்டங்களை அவர் கலந்தாலோசித்து ஆராய்ந்தார்.

பசுமாடுகளும் வெள்ளாடுகளும் பால் உற்பத்திக்கென்றே வளர்க்கப்படுகின்றன. நம்பிக்கையளிக்கும் வகையில் எல்லாம் திட்டமிட்டவாறு நடந்தால், அடுத்த இரண்டுவருடங்களில் அவை பலமடங்கு பெருகுவதுடன் பால் உற்பத்தியும் 60 லீற்றருக்குக் குறையாமல் இருக்கும். அவை தங்களுடைய கன்றுகளுக்கும் குட்டிகளுக்கும் ஒருவருடம் வரைபாலூட்ட நேர்ந்தால் நாம் பன் கன்றுகளையும் கிடாய்க் குட்டிகளையும் நல்ல விலைக்குக் கொடுக்கலாம். அவ்வாறே ஒருவயதுப் பசுக் கன்றுகளையும் மறிக் குட்டிகளையும் விற்று இலாபம் அடையலாம்.

வாத்துக்களை எடுத்துக்கொண்டால், முட்டையிடக்கூடிய பருவ நிலைக்கு வந்த 20 பெண் வாத்துக்களை உருவாக்குவதே இலக்கு. கோழிகளைப் போலல்லாது, அவை போதுமானளவு முட்டைகளை இட்டு அவற்றை அடைகாக்கும் பழக்கத்தினைக் கொண்டவை. வாத்துக்கள் அடைகாப்பதற்கு முன் 5-7 முட்டைகளை இட்டு அவற்றை அடைகாப்பதை உறுதி செய்கின்றன. வாத்துக்களைப் பொறுத்தவரை அவை முட்டையிடத் தொடங்கச் சிறிதுகாலம் எடுக்கிறது. வாத்துக்கள் சிறந்த சந்தைப்படுத்தும் வாய்ப்பைக் கொண்டுள்ளன என்பது ஒரு நல்ல செய்தியாகும்.



இந்தவருடம் இவரால் எழுதப்பட்ட இன்னொரு வேலை தொடர்பான ஆக்கம் கென்யாவில் நிலவுகின்ற மோசமான சுற்றுச்சூழல் விவசாயிகளை எவ்வளவு தூரம் பாதித்து வருகின்றது என்பதை எடுத்துக் கூறுகிறது.

காலநிலையைப் பற்றிச் சொல்லும் போது எனது சொந்த இடம் அல்லது இப்பணிக்கென நான் பொறுப்பேற்ற பல பண்ணை நிலங்கள் ஆகியவற்றை நோக்கினால், பனியினால் பெரியளவிலோ சிறியளவிலோ பாதிக்கப்பட்ட தேயிலை நிறுவனங்கள் என அவை செய்திகளில் அடிபட்டிருக்கும். கென்யர்கள் நீண்டகாலமாக சுற்றுச் சூழல் அறிகுறிகளை புறக்கணித்து வருகின்றமைக்கான காரணத்தை என்னிடம் நீங்கள் வினவினால் அது ஒரு கவலை தருகின்ற விடயமாகவே இருக்கும். கடந்த 5-10வருடங்களாக இங்கு நிலவுகின்ற காலநிலையை அவதானித்து வருகின்றபோது குறிப்பாக, எமது நாட்டிலுள்ள மத்திய மழைக்காட்டுப் பிரதேசம் பாரிய அழிவுக்குள்ளாகும் என எதிர்வு கூறுவது எம்மைக் கவலை கொள்ளச்செய்கின்றது.

இணையத்தளத்தினூடாக விவசாயச் சேவைகளைஆற்றிவரும் திரு. கம்வெஞ்ஜி தான் நடாத்திவரும் பண்ணை தொடர்பாக தனது பட்டறிவுகளை YouTube இனூடாகப் பகிர்ந்து வருகிறார். அவருடைய ஐந்துபாகங்களைக் கொண்ட தொடர் நிகழ்ச்சியின் காணொளித் தொகுப்புக்களை நீங்கள் "Chronicles of a Kenyan farmer" (Born Ready E.K) YouTube இல் கண்டு களிக்கலாம்.

கறற்றினாநையேறி (Karatina Nyeri) இலுள்ள எனது பண்ணையின் நாளாந்த செயற்பாடுகள் அடங்கிய காணொளித் தொடர் நிகழ்ச்சியானது 5 பகுதிகளைக் கொண்டது. நாய்கள், ஆடுகள், பசுமாடுகள், கன்றுகள், வாத்துக்கள் மற்றும் பயிர்கொடிகள், வாழைப்பழங்கள், நேப்பியர் புற்கள்,அவரை, மக்காச்சோளம், பழமரங்கள் ஆகியவற்றை நீங்கள் இவற்றில் கண்டுகளிக்கலாம்.

அத்துடன் நான் எனது பண்ணையிலுள்ள ஆடு மாடுகளின் கழிவுகளைக் கொண்டு எவ்வகையில் பயனுறுகின்றேன் என்பதனையும் காண்பிக்கிறேன்.


நான் எனதுபண்ணைக்குச் செல்லும்போது நீங்களும் என்னுடன் இணைந்தால் உங்களையும் அழைத்துச் செல்கின்றேன்.

தமிழில்: ஞா. அபிமன்யு

தகவல் : bornreadyek.blogspot.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் மருத்துவக்கல்வி



- SRILANKAN MEDICAL COUNCIL இனால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறி - இதனால் இலங்கை மாணவர்கள் கல்வியினை பூர்த்தி செய்த பின்னர் SLMC EXAM இனை pass பண்ணினால் இலங்கையிலேயே வேலை செய்யலாம்.
- RSU இல் கல்வி கற்பவர்கள் RSU ஆனது EUROPEAN Union இனால் அங்கீகரிக்கப்பட்டமையால் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள GERMANY, MALTA, DENMARK, BELGIUM, FRANCE, சுவீடன் போன்ற 27 நாடுகளில் பெரும்பாலானவற்றில் எவ்வித அனுமதிப் பரீட்சைகளும் இன்றி உடனடியாகவே வேலையில் சேரலாம். (ரஸ்யா, சீனா,பங்களாதேஸ் போன்ற நாடுகளில் பயின்ற மாணவர்களுக்கு இது சாத்தியமில்லை.)
- 2003ம் ஆண்டிலிருந்து இன்றுவரை 100க்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்வி கற்று வெளியேறி உள்ளார்கள்.
- தற்பொழுதும் 14 இலங்கை மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர்.
- RSU இல் கற்ற மாணவர்கள் மிகவும் திறம்பட இலங்கையில் கொழும்பு ஆசிரி வைத்தியசாலை, கண்டி வைத்தியசாலைகளில் திறம்பட நிபுணத்துவம் வாய்ந்த கல்வியினை வழங்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.
- மேலும் பலர் இலங்கை ஐரோப்பா தவிர்ந்த நாடுகளான கனடா, இங்கிலாந்து, அயர்லாந்து மற்றும் பல நாடுகளில் திறம்பட மருத்துவ சேவையாற்றிக் கொண்டு இருக்கின்றனர்.

## RSTU பற்றி

1950 இல் ஆரம்பிக்கப்பட்டது.


19 பரிசோதனைக்கூடங்கள், 5 கல்விச் சாலைகள், 4 ஆய்வு கூடங்கள், MEDICINE, DENTISTRY, PHARMACY, REHABILITATION, NURSING, PUBLIC HEALTH உட்பட 11 பாடப்பிரிவுகள்.

மொத்தமாக 5500 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

500 வெளிநாட்டு மாணவர்கள் கற்கின்றார்கள்.

விரிவுரையாளர்கள், உதவியாளர்கள் என கல்வித்துறையில் மாத்திரம் 1271 பேர் பணிபுரிகிறார்கள்.

ஐரோப்பாவில் உள்ள 80 பல்கலைக்கழகங்களுடன் இணைப்பில் இருப்பதன் மூலம் மாணவர்கள் EXCHANGE PROGRAM மூலம் எங்கு சென்றும் கல்வியினை பெறக்கூடிய சந்தர்ப்பத்தினை வழங்குகின்றார்கள்.



காலம் :- 6 வருடங்கள்
கற்கை மொழி :- ஆங்கிலம்
பட்டம் :- Medical Doctor(MD)


தெளிவான ஆங்கில அறிவு, A/L Biology இல் 3 பாடங்களில் சித்தி என்பன இப்பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை தகுதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MEDICINE IN EUROPE

## RIGA STRADINS
## UNIVERSITY – LATVIA





ஆண்டிற்கு இரண்டுமுறை அனுமதிகள் வழங்கப்படும்.
September 1st மற்றையது February 1st

RSU பல்கலைக் கழகமானது வைத்தியசாலையினை தன்னகத்தே கொண்டுள்ளமையால் மாணவர்கள் அனுபவரீதியாக தேர்ந்தவர்களாகின்றனர்.

10 மாணவர்களுக்கு ஒரு விரிவுரையாளர் என்னும் ஐரோப்பிய கல்வி சட்டதிட்டங்களுக்கமைவான கல்வி ஒழுங்குகள்.

இதுவரை கல்வி கற்றுக்கொண்ட மாணவர்களில் கணிசமானளவு பெண்களும் அடங்குவர். அதற்கு ஏற்றமாதிரியான மிகவும் பாதுகாப்பான சூழல்.

மிகவும் தரமான ஆனால் மிகவும் குறைந்த செலவுடனான உணவு, தங்குமிட மற்றும் போக்குவரத்து வசதிகள்.

மாணவர்களின் தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்து அவர்களை அன்பாகவும், அரவணைப்பாகவும் வேண்டியவற்றை நிவர்த்தி செய்யும் பல்கலைக்கழக நிர்வாகம்.

செங்கன் (SCHENGEN) விசா வழங்கப்படுவதால் விடுமுறையில் ஐரோப்பிய நாடுகளில் ஏதாவது ஒன்றில் முழுநேர வேலை செய்தால் ஆண்டு முழுவதுமான செலவுகளை பார்க்க கூடிய வசதி.

2012 SEPTEMBER க்கான அனுமதிகள் 15.07.2012 வரையிலும் எம்மால் இலங்கையில் வைத்தே வழங்கப்படுகின்றன.

## V4 EDUCATIONAL CONSULTANCY

**Catalyst for your higher studies**

இல 23, நவீன சந்தை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.
கிளைகள் : யாழ்ப்பாணம், நெல்லியடி.
0773867257, 0774836084.
Web : www.v4edu.com
E-mail : mail@v4edu.com

Educational Consultancy
we 4 you

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவில்

இந்தப் பகுதியில் O/L, A/L இல் சித்தி பெற்ற மாணவர்கள் இந்தியாவில் தமது உயர் கல்வியை தொடருவது பற்றி விரிவாக பார்ப்போம். அதாவது இந்தியாவில் நம் மாணவர்கள் தமது கல்வியை தொடருவதற்கான சூழல் எவ்வாறு அமைந்துள்ளது, எவ்வகையான கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும், அவற்றிற்கான கட்டணங்கள் எவ்வளவு, இந்திய உயர்கல்வியின் ஒப்பீட்டளவான அனுகூலங்கள், கற்று முடித்த பின்னரான வேலைவாய்ப்புக்கள், கல்விக்கான அங்கீகாரம் எம் மண்ணில் கிடைக்கின்றதா. போன்ற பல்வேறு உயர் கல்வி சார்பான தகவல்கள் அலசப்படுகின்றது. இத் தொடர் சம்பந்தமான மேலதிக விபரங்கள் தேவையாக இருப்பின் தொலைபேசி வாயிலாகவோ, மின்னஞ்சல் வழியாகவோ, கடிதம் மூலமாகவோ, தொடர்பு கொள்ளு மிடத்து உங்களுக்குத் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

முதலில் இந்தியாவின் கற்கைச் சூழலைப் பற்றி பார்ப்போம். 15 வயதில் பள்ளி மாணவர்கள் $10^{th}$ (பத்தாவது) பரீட்சை எழுதுவார்கள். அதாவது எமது க.பொ.த சாதரண (O/L) பரீட்சைக்கு ஒப்பானது. இதன் பின்னர் மாணவர்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. முதலாவது தொகுதியினர் பள்ளிப் படிப்பை உயர்நிலைக்குத் தொடர்ந்து +2 எனப்படும் தமது A/L இற்கு ஒப்பான கல்வியை படிக்கிறார்கள். இது ஏறத்தாழ எமது A/L கல்வித்திட்டத்தினை ஒத்துப்போகின்றது.

இங்கே A/L இல் ***MATHS, BIOLOGY, COMMERCE, ARTS*** என நான்கு பிரிவுகளைப் போல அங்கேயும் **+2** இல் ***COMPUTER SCIENCE GROUP*** அதாவது ***MATHS, COMPUTER SCIENCE*** இனைப் பிரதானமாகவும் ***BIOLOGY GROUP*** இனைப் பின்பற்றுபவர்கள் ***MATHS, BIOLOGY*** என்பவற்றை பிரதானமாகவும் ***COMMERCE GROUP*** இனைப் பின்பற்றுபவர்கள் ***MATHS, COMMERCE*** ஆகியவற்றினை பிரதானமாகவும் படிப்பார்கள். இதில் சிறப்பம்சம் என்ன வென்றால் **+2**வில் உள்ள அனைத்து வகைகளிலும் ***MATHS*** உள்வாங்கி இருப்பதால் அனைத்து மாணவர்களுக்குமான உயர்கல்விக்கான பாடத் தெரிவுகள் அதிகமாக இருக்கும்.

உதாரணமாக **+2**வில் ***COMMERCE GROUP*** இல் உள்ள ஒருவர் ***BSC COMPUTER SCIENCE*** இல் படிக்கக்கூடிய வாய்ப்பு சாத்தியமானதே.

சரி ***$10^{th}$*** இல் ***Pass*** பண்ணிய மாணவருக்கு **+2** க்கு பதிலாக இன்னுமொரு தெரிவு இருப்பதாக சொன்னோம் அல்லவா? அந்த விடயத்திற்கு வருவோம். அதாவது ***$10^{th}$ Pass*** பண்ணிய மாணவர்களில் பலர் **+2** இல் குறைவான புள்ளிகளைப் பெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாலும் மேலும் தமது பட்டப் படிப்பில் இரண்டாம் ஆண்டில் நேரடியாக போய் சேரக்கூடிய வழிவகைகளை இந்த Diploma கல்வி செய்து வருகிறது. ***Diploma***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உயர்கல்வி

கல்வியானது ENGINEERING, TRAVELS & TOURISM, HOTEL MANAGEMENT, FASHION DESIGNING PRINTING TECHNOLOGY போன்ற பல்வேறு துறைகளில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் $10^{th}$ இன் பின்னர் DIPLOMA கல்வியை படிப்பவர்களின் செயன்முறை அறிவு +2 படிப்ப வர்களினைவிட அதிகமாக இருப்பதால் அவர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் போதும், பட்டப் படிப்பினை தொடரும் போதும் அவர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம் என்பதினை மறுக்க முடியாது.

**சில Diploma கற்கைநெறிகள் 3 வருட காலங்கள்**

1. CIVIL ENGINEERING (DIPLOMA)
2. ELECTRICAL &ELECTRONICS ENGINEERING (DIPLOMA)
3. ELECTRONICS & COMMUNICATION ENGINEERING (DIPLOMA)
4. INFORMATION TECHNOLOGY (DIPLOMA)
5. COMPUTER ENGINEERING (DIPLOMA)
6. ARCHITECTURAL ASSISTANTSHIP (DIPLOMA)
7. MECHANICAL ENGINEERING (DIPLOMA)
8. GARMENT TECHNOLOGY (DIPLOMA)
9. FISHERIES TECHNOLOGY (DIPLOMA)
10. INSTRUMENTATION & CONTROL ENGINEERING. (DIPLOMA).
11. MODERN OFFICE PRACTICE. (DIPLOMA).
12. INTERIOR DESIGN & MODEL MAKING PRACTICE (DIPLOMA)
13. APPAREL TECHNOLOGY (DIPLOMA)
14. CHEMICAL ENGINEERING (DIPLOMA)
15. LEATHER TECHNOLOGY (DIPLOMA)
16. ENVIRONMENTAL POLLUTION (DIPLOMA)
17. PRINTING TECHNOLOGY (DIPLOMA)
18. AGRICULTURE TECHNOLOGY (DIPLOMA)
19. CAMERA OPERATION & PHOTO ENGRAVING (DIPLOMA)
20. PLASTIC ENGINEERING (DIPLOMA)
21. TRAVEL & TOURISM (DIPLOMA)
22. HOTEL MANAGEMENT (DIPLOMA0
23. FASHION DESIGNING (DIPLOMA)
24. INTEGRATED BACHELOR OF FINE ARTS (BFA) in DANCE and MUSIC

சரி இந்தப் படிப்பு $10^{th}$ முடித்தவர்களுக் குத்தானே நமக்கு எதற்கு என்கிறீர்களா?. இந்தியாவில் $10^{th}$ என்பது நமது O/L இற்கு சமமானதென்பதால் இங்கே O/L முடித்தவர்கள் இந்தியாவில் மேற்கூறிய Diploma course இனை படிப்பதற்கு அனுமதி பெற முடியும்.




O/L படித்தவர்கள் Diploma படிக்கலாம்
A/L படித்தவர்கள் Degree படிக்கலாம்.

DIPLOMA COURSE பற்றியும் மேலும் அவற்றினை படிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள் பற்றியும் அறிந்து கொண்டோம். இனி DEGREE COURSE பற்றி பார்ப்போம். அதற்கு முன்னால் இந்தியாவில் கல்வி கற்பது சம்பந்தமான சில முக்கிய விடயங்கள் பற்றி அலசுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் , கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பு

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்கள், மாணவிகள் இந்தியாவில் கல்வி கற்பதற்காக சென்று கொண்டிருக்கின்றார்கள். காலம் காலமாய் நமது மாணவர்கள் இந்தியாவில் தமது பல்கலைக்கழக கல்வியினை பூர்த்தி செய்து பின்னர் இங்கு வந்து பல்வேறு துறைகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் கூட பல்வேறு அரசாங்க/அரசசார்பற்ற அலுவலகங்களில் உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களில் குறிப்பிடக்கூடிய அளவில் இந்தியாவில் பட்டம் பெற்றவர்கள் வேலை செய்கிறார்கள். காலம் செல்லச் செல்ல Degree இனது அவசியம் உணரப்படுமிடத்து இலங்கையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காவிட்டாலும் இந்தியாவில் தாரா ளமாக கல்வியினை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதாலும் இந்தியாவில் பல்கலைக்கழக கல்வியினை தொடரும் இலங்கை மாணவர் களில் தற்போதைய எண்ணிக்கை பல ஆயிரங்கள்.

இந்தியாவின் கலாச்சாரமானது ஏறத்தாழ எமது கலாச்சாரத்துடன் ஒத்துப் போகின்றது. அதுவும் தமிழ் நாட்டில் உள்ள மக்களின் கலாச்சாரத்தினை தாரளமாக எமது கலாச்சாரத்துடன் பொருத்திப் பார்க்கலாம். மேலும் மாணவர்கள் / மாணவிகள் இனது பாதுகாப்பினை கருதுமிடத்து பொதுவாக மாணவ மாணவிகளுக்கு கல்லூரி விடுதிகளில் இடமுண்டு. மேலும் எல்லா கல்லூரிகளிலும் மாணவர்களுக்கென தனியான விடுதிவசதிகளும் மாணவிகளுக்கு தனியான விடுதி வசதிகளும் வழங்கப்பட்டிருக்கும்.

இதனால் எந்நேரமும் அவர்களினது வரவுகள் பதிவில் இருக்கும். நேரக்கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கென செய்யப்பட்ட விசேட ஒழுங்குகளின் அடிப்படையில் கல்லூரி விடுதிகளில் தங்கும் மாணவர்களது பாதுகாப்பு கல்லூரி நிர்வாகத்தினால் பொறுப்பேற்கப் பட்டிருக்கும்.

### பல்கலைக்கழகம் / கல்லூரி வேறுபாடுகள்

இலங்கையைப் போலவே பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதற்கு நிறையமதிப்பெண்கள் எடுப்பது அவசியம். நிறைந்த போட்டிகளின் பின்னர் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் முதலில் தெரிவு செய்வது பல்கலைக்கழக அனுமதி களையே. பல்கலைக்கழகங்கள் அனைத்தும் அரசாங்கத்தினது நிதியில் இயங்குவதால் பல்கலைக்கழக அனுமதிகள் பெரும்பாலும் இலவசமானதே. ஆயினும் ஒவ்வொரு கற்கை நெறியிலும் குறிப்பிட்ட சில ஆசனங்கள் பல்வேறு காரணங்களுக்காக மிகவும் கூடிய கட்டணங்களுடன் மாணவர்கள் அனுமதிக்கப் படுவர். இவர்களுள் வெளிநாட்டு மாணவர் களும் உள்வாங்கப்படுவர்.


வருடந்தோறும் இலட்சக்கணக்கான மாணவர்கள் +2 பரீட்சை எழுதுமிடத்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படுவதால் ஏற்படும் மிகப்பெரிய உயர்கல்வி வழங்கல் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உருவாக்கப் பட்டவைதான் கல்லூரிகள். இவற்றில் பெரும்பாலானவை தனியார் கல்லூரிகள். கல்லூரிகள் அவற்றின் கற்கை நெறிகளுக்கேற்ப ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழகங்களே இக் கல்லூரிகளின் கற்கை செயற்பாடுகளை கட்டுப்படுத்தும். பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கான தவணைப் பரீட்சைகள் யாவும் பல்கலைக் கழகத்தினாலேயே நடாத்தப்படும். உதாரண மாக அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பரீட்சைகள், ஒரே சமயத்தில், ஒரே பரீட்சை அனைத்துக் கல்லூரிகளிலும் நடைபெறும். ஆக மொத்தத்தில் கற்கை நெறி ஒன்று, பரீட்சை ஒன்று, வழங்கும் பட்டம் ஒன்று ஆனால் கல்விக்கூடங்கள் (கல்லூரிகள்) வெவ்வேறு.

### கல்லூரியின் தரம் மற்றும் வசதிகள்

அனைத்துக் கல்லூரிகளும் ஒரே வகையான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருந்தாலும் குறிப்பிட்ட சில கல்லூரிகள் ஏனைய கல்லூரிகளுடன் ஒப்பிடும் போது மிகவும் தரமானவை. இங்கே தரம் என்று சொல்லும் போது கல்வித்தரம், கற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளுக்குரிய வசதிகள், தரமான விரிவுரையாளர்கள், ஆய்வு கூட வசதி, நூலக வசதி, போக்குவரத்து வசதி, உணவு வசதி, விடுதி வசதி, தொடர்பாடல் வசதி, கல்வி தவிர்ந்த ஏனைய செயற்பாட்டு வசதிகள் (EXTRA CARRICULAR ACTIVITIES) போன்ற பல்வேறு காரணிகள் கருத்தில் கொள்ளப்படும். சில கல்லூரிகளின் தரமானது ஒப்பீட்டளவில் பல்கலைக் கழகங்களை விட உயர்வானது. என்னதான் பல்வேறு வசதிகளில் பூரணத்துவம் அடைந்திருந்தாலும் பிரதானமாக கல்விச் செயற்பாடுகளே ஒரு கல்லூரியினை தரப்படுத்துதலில் முன்னிலைக்கு கொண்டு வர உதவுகின்றது.



## ஆங்கில மொழியிலான கற்கைநெறிகள்

இந்தியாவைப் பொறுத்தவரை பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் ஆங்கில மொழி கற்கை மொழியாகவும், பேச்சு மொழியாகவும் இருப்பதால் இந்தியாவில் பட்டம் பெற்றவர்களின் ஆங்கில மொழித்தேர்ச்சியும் அவர்களின் வேலை வாய்ப்பினை ஒப்பீட்டளவில் அதிகரிக்கின்றன.

## வெளிநாட்டு மாணவர்களின் அனுமதி

ஆயிரக்கணக்கில் நாடு முழுவதும் கல்லூரிகள் இருப்பினும் வெளிநாட்டு மாணவர்கள் தமது கற்கை நெறிகளை தொடர அனுமதிப்பது சில நூறு கல்லூரிகளே. வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான அனைத்து வசதிகளையும் பூர்த்தி செய்து வெளிநாட்டு மாணவர்களை கற்கைநெறிகளுக்கு அனுமதிப்பது தொடர்பான சிறப்பு அனுமதி பெறும் கல்லூரிகளிலேயே வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்க முடியும்.

அதாவது இலங்கையில் இருந்து செல்லும் எந்தவொரு மாணவரும் இவ்வாறான கல்லூரிகளிலேயே கற்க முடியும். சரி நமக்கு எப்படி குறிப்பிட்ட கல்லூரி வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதா இல்லையா என்று தெரியும் என்கிறீர்களா? அது மிகவும் இலகுவானது, குறிப்பிட்ட கல்லூரியின் இணையத்தளத்தினை பார்வையிட்டால் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். இல்லையெனின் அவர்களது தொடர்பு எண்ணினைப் பெற்று தொலைபேசி மூலம் அறிந்து கொள்ளலாம். அதிலும் ஏதாவது சிக்கல் இருப்பின் நேரடியாக இந்திய தூதரகத்தில் இருக்கும் கல்வி சார் அதிகாரியிடம் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய அனுமதியை பெற்ற கல்லூரிகள் (LISTED COLLEGES) தவிர ஏனைய கல்லூரிகளில் பெறப்படும் அனுமதிகளுக்கு மாணவர் கடவுச்சீட்டு (STUDENT VISA) கிடைப்பது சாத்தியம் இல்லை என்றே கூறலாம்.

## இந்திய கல்வியின் தரம் மற்றும் தற்போதைய நிலை

உலகத்தில் சனத்தொகை கூடிய நாடுகளில் இந்தியாவுக்கு இரண்டாம் இடம். கல்வியின் தரத்தை பற்றி கதைப்பதற்கு சனத்தொகை பற்றி விளக்கம் ஏன் என்கிறீர்களா? சம்பந்தம் இருக்குங்கோ. சீனாவுக்கு நிகராக இல்லாவிட்டாலும் அதில் குறிப்பிட்ட அளவுக்கு தொழிலாளர் பலம் இந்தியாவில் உண்டு. அதே மாதிரி தகவல் தொழிநுட்பம், தொழிநுட்ப வசதிகள் என்பவற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியர்களின் வளர்ச்சி ஏனைய நாடுகளுடன் ஏன் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போதே அதிகளவில்தான் உள்ளது. ஆகவே குறைந்தளவு தொழிலாளர் ஊதியம், குறைந்த சம்பளத்தில் நிறைந்த மூலதனத்துடனான பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள், அந்நிய முதலீட்டினை ஊக்குவிக்கும் அரசாங்கம் மேலும் உற்பத்திப் பொருட்களை உள்ளூரிலேயே விற்பனையாக்க கூடிய சந்தை வாய்ப்பு இதைவிட சர்வதேச முதலீட்டாளர்களுக்கு வேறு என்ன வரப்பிரசாதம் இருக்க முடியும்?? இதனால் NOKIA, SAMSUNG, SONY, BMW, VERGIN போன்ற பல்லாயிரக்கணக்கான அந்நிய முதலீட்டாளர்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் உட்பட அனைத்து வகைகளான தொழிற்பாடுகளும் இந்தியாவில் சக்கை போடு போடுகின்றன. ஆக இந்த சர்வதேச, உள்நாட்டு நிறுவனங்களின் மூளைதனங்களான பணியாளர்கள், திறமையாக இருத்தல் அவசியமல்லவா? அதுமட்டும் இன்றி அவர்களினது வேலையின் தன்மைக்கேற்ப கற்கைநெறிகளும், பாடத்திட்டங்களும் மாற்றியமைக்கப்படல் அவசியமானதல்லவா? ஆக காலத்தினதும் நிறுவனங்களினதும் தேவைக்கேற்ப கல்லூரிகளினதும் கற்கைமுறைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேலும் பல மாணவர்கள் CAMPUS INTERVIEW எனப்படும் நேர்காணல் தகுதிகாண் பரீட்சைமூலம் படித்துக் கொண்டிருக்கும் போதே வேலையினை பெற்று விடுகிறார்கள்.

எனவே இந்தியாவில் பெற்ற பட்டமா? என அந்த காலத்தில் அங்கலாய்ப்பது போல அவதிப்பட தேவையில்லை. மற்றும் இன்றைய இந்திய கல்வி இலங்கையில் பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படும் கல்விக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதோடு வேலைவாய்ப்புகளை உடனடியாக கௌவிக் கொள்ளக்கூடியது என தைரியமாக சொல்லிக் கொள்ளலாம். மேலும் இலங்கையின் பட்டதாரிகள் பலபேர் வேலையில்லாமல் இருக்குமிடத்து இந்தியாவில் பட்டம் பெற்ற ஒருவர் இலகுவில் வேலையினை பெறக்கூடியதாக இருப்பது அவரது கல்வி வேலை வாய்ப்பினை நோக்கியதாக இருந்ததோடு அவர் கற்கும் காலங்களில் வேலைக்காக பல்வேறு வழிகளிலும் தயார்ப்படுத்தப்பட்டிருப்பார் என்பதே காரணமாகும். மேலும் அவருக்கு வேலைவாய்ப்பை நோக்கிய மாதிரி நேர் காணல்கள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பன வழங்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தியாவில் கல்வி கற்பதற்கான கற்கைநெறிக்கட்டணங்கள்**


வெளிநாடுகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்கள் முதலில் கருத்தில் கொள்வது செலவுகளைத்தான். எமது மாணவர்கள் சென்று படிப்பதற்கு உலகத்திலே மிகவும் குறைந்த செலவில் சாத்தியமாவது இந்தியாவில் மட்டும் தான். மருத்துவக்கல்வி இதில் விதிவிலக்கு. மருத்துவம் தவிர்ந்த அனைத்து வகையான கல்விகளும் இந்தியாவில் மிகவும் குறைவான கட்டணத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடியவையாக இருக்கும். கீழ் வரும் அட்டவணையில் கற்கை நெறிகளும் கல்விக் கட்டணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்படும் கல்விக் கட்டணங்களில் சிறுசிறு மாற்றங்கள் கல்லூரிக்கு கல்லூரி அவற்றின் தரத்துக்கும் வசதிகளுக்கும் ஏற்ப மாறுபடும். எவ்வாறெனினும் சராசரியாக ஒவ்வொரு கற்கைநெறிகளுக்குமான ஆண்டுக் கட்டணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

3வருடங்களில் Degree படித்து முடிந்து விடும்

2012 August இல் A/L எடுப்பவர்கள் 2015 April இல் Degree முடித்துவிடுவார்கள். இதுவே இலங்கையானால் Result வர, பாடத்தெரிவுக்கான காலம், பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கான காலம், பல்கலைக்கழகங்கள் பல் வேறு காரணங்களினால் பூட்டப்படுவதனால் ஏற்படும் தாமதங்கள் என 3 வருட கல்வியினை மேலும் 2 வருடங்களாவது இழுத்தடிக்கப்பட்டு விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கற்கைநெறி / மொத்த கற்கைக் காலம் | கல்விக் கட்டணம் (இலங்கை ரூபா | |
|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு | ஒரு மாதத்திற்கு |
| மருத்துவம் MBBS 5 ஆண்டுகள் | 33 இலட்சம் | 275,000 |
| (DENTAL) பல் மருத்துவம் 5 ஆண்டுகள் | 12 இலட்சத்து 50,000 | 104,000 |
| பொறியியல் (ENGINEERING) 4 ஆண்டுகள்.<br>1) CIVIL ENGINEERING<br>2) MECHANICAL ENGINEERING<br>3) ELECTRONICS &<br>4) ELECTRONICS & ELECTRICAL<br>5) COMPUTER SCIENCE<br>6) INFORMATION TECHNOLOGY<br>7) GARMENT & FASHION | 3இலட்சத்து 50,000 | 30,000 |
| BSc Bio chemistry (3 வருடம்) | 37,500 | 3,125 |
| BSc Micro Biology (3வருடம்) | 37,500 | 3,125 |
| BSc Biotechnology (3வருடம்) | 50,000 | 4,200 |
| BSc Computer science (3 வருடம்) | 75,000 | 6,350 |
| BSc Electronic & communication Science (3 வருடங்கள்) | 62,500 | 5,200 |
| BSc Information System management (3 வருடங்கள்) | 75,000 | 6,250 |
| BSc Mathematics (3 வருடங்கள்) | 50,000 | 4,200 |
| BSc Electronic media (3 வருடங்கள்) | 130,000 | 11,000 |
| BSc Visual Communication (3 வருடங்கள்) | 130,000 | 11,000 |
| B Com (3 வருடங்கள்) | 56,000 | 4,700 |
| B Com Bank management (3 வருடங்கள்) | 56,000 | 4,700 |
| BCom Corporate Secretaryship (3வருடங்கள்) | 56,000 | 4,700 |
| BCA Bachelor of Computer Application (3வருடங்கள்) | 75,000 | 6,250 |
| BA English (3வருடங்கள்) | 50,000 | 4,200 |
| BBA (3வருடங்கள்) | 62,500 | 5,200 |
| BSc Visual Communication (3 வருடங்கள்) | 130,000 | 11,000 |
| B Com (3 வருடங்கள்) | 56,000 | 4,700 |
| B Com Bank management (3 வருடங்கள்) | 56,000 | 4,700 |
| BCom Corporate Secretaryship (3வருடங்கள்) | 56,000 | 4,700 |
| BCA Bachelor of Computer Application (3வருடங்கள்) | 75,000 | 6,250 |
| BA English (3வருடங்கள்) | 50,000 | 4,200 |
| BBA (3வருடங்கள்) | 62,500 | 5,200 |
| BA- Sociology (3வருடங்கள்)<br>BA- Economics (3வருடங்கள்)<br>BSc- Psychology (3வருடங்கள்)<br>BSc- Statistics (3வருடங்கள்)<br>BSc- Physics (3வருடங்கள்)<br>BSc- Chemistry (3வருடங்கள்)<br>BSc- Botany (3வருடங்கள்)<br>BSc- Zoology (3வருடங்கள்)<br>BSc- [Nutrition, Food Service Management & Dietics]<br>BSc- Electronics (3வருடங்கள்)<br>BSc- Catering Science & Hotel management (3வருடங்கள்)<br>BSc- Costume Design & Fashion (3வருடங்கள்)<br>B.Com [e- Commerce] (3வருடங்கள்)<br>BBM - (3வருடங்கள்)<br>BBM- (Information Systems) (3வருடங்கள்)<br>BBM (Retail management) (3வருடங்கள்) | 50,000 தொடக்கம் 75,000 வரை | 4200 தொடக்கம் 6250 வரை |
| BFA (DANCE)+ MUSIC/மிருதங்கம்/வீணை/வயலின் | 15,000 | 1,250 |
| BFA (MUSIC)+ DANCE/மிருதங்கம்/வீணை/வயலின் | 15,000 | 1,250 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம், பல் மருத்துவம் ஆகிய படிப்புகள் செலவு அதிகம்.

CIVIL ENGINEERING ஆண்டு 3 இலட்சம் செலவில் தரமான கல்லூரியில் கல்வி கற்கலாம்.

Music, Dance என்பவற்றை முதற் பாடங்களாகவும் வயலின், வீணை, மிருதங்கம் என்பவற்றை துணைப்பாடங்களாக கொண்டு படிப்பதற்கு மொத்தச்செலவு மூன்றாண்டுகளுக்கு இலங்கைப் பணம் 45000 ரூபா மட்டுமே.



கல்விக் கட்டணம் பார்த்தாயிற்று ஏனைய செலவுகளை பற்றி பார்க்கலாம். ஏனைய செலவுகளான தங்குமிடம், போக்குவரத்து, சாப்பாடு இதர செலவுகள் என்று பார்க்கும் போது ஒரு மாதத்துக்கு இலங்கை நாணய மதிப்புப்படி 10, 000 ரூபா முதல் 15, 000 ரூபா வரை சராசரியாக செலவாகும். ஆக மொத்தத்தில் கொழும்பில் தங்கிப்படிக்கும் மாணவரின் செலவில் பாதி கூட ஆகாது. ஆக மொத்தத்தில் கூட்டிக்கழித்துப் பார்த்தால் A/L படித்த மாணவர் ஒருவர் வீட்டில் சும்மா இருந்து காலம் கழித்தால் ஆகும் செலவினை விட இந்தியாவில் ஆகும் செலவுகள் குறைவு என்றே கூறலாம். Degree படிக்க இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் போது நாங்கள் எதற்கு எங்கெல்லாமோ அலைந்து காலத்தை, பணத்தினை, வீணடித்து அலைச்சல்படவேண்டும்??

## கல்லூரிகளை தெரிவு செய்யும் முறை

இந்தியாவில் கல்வி என்று முடிவெடுத்தாச்சு ஆனால் எந்தக்கல்லூரியில் சேர்ப்பது என்று முடிவெடுக்கவில்லையா? முடிவெடுக்க முன்னர் இந்தப்பகுதியினை படிப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும். இதை ஒரு சம்பவத்தின் அடிப்படையில் விளக்குவது சுலபமாக இருக்கும். இலக்கியா கல்லூரி A இலும் இலக்கணா கல்லூரி *B* இலும் கல்வி கற்றவர்கள் என்று வைத்துக்கொள்வோம். இலக்கியாவும் இலக்கணாவும் ஏறத்தாழ ஒரே வகையான திறமையை கொண்டிருப்பினும் வேலை வாய்ப்பு ஒன்றுக்கான பரீட்சையிலும், நேர்காணலிலும் இலக்கியா இலகுவாகவும், சாமர்த்தியமாகவும் செயல்பட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள இலக்கணா தயக்கத்துடனும், திணறலுடனும் பரீட்சையினையும், நேர்காணலையும் எதிர்கொள்ள வேண்டி இருந்தது. இருவர் பயின்ற கல்லூரிகளும் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான தகுதியினை பெற்றிருந்தாலும், இந்திய மாணவர் வீசாவினை பெற்றுக்கொள்ளும் வகையிலான Listed colleges பட்டியலில் இருந்தாலும், இலக்கியா படித்த கல்லூரி *A* ஆனது இலக்கணா படித்த கல்லூரி *B* இனை விட சிறப்பான ஒரு கல்வியினையும், வேலைவாய்ப்பு வழிகாட்டலையும், வேலையை பெற்றுக்கொள்வதற்கான தகுதிகளையும் வளர்த்து விட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே கல்லூரிகள் பல இருப்பினும் சிறந்த, பொருத்தமான, அனைத்து வசதிகளையும் கொண்ட மாணவர் நலம் சார்ந்த கல்லூரியை தெரிவு செய்தல் அவசியம் ஆகும்.

தமிழ்நாட்டில் ராக்கிங் (Ragging) முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரமான கல்லூரியை தெரிவு செய்யும் எளிமையான **வழிகள்.**

ஏற்கனவே படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களை விசாரிக்கலாம் :-
மிகவும் எளிமையானதும் அதே நேரம் உண்மையினையும் அறிந்துகொள்ளலாம்.

✌✌✌

இணையத்தளம் மற்றும் ஊடகங்கள் மூலம் அறிதல் :-
தகவல்களை பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பினும் உண்மைத்தன்மையினை முழுவதுமாக அறியமுடியாது.

✌✌✌

கல்லூரி முகவர் (EDUCATIONAL CONSULTANT) :-
இவர்கள் இந்திய கல்லூரிகளை இலங்கையில் இருந்தவாறே பிரதிநிதிப் படுத்துவார்கள். ஒரு கல்லூரி சம்பந்தமான அனைத்து விதமான தகவல்களும் இவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். கல்லூரிகளுடன் எந்த நேரத்திலும் தொடர்பு கொண்டு உங்களுக்கு வேண்டிய உதவிகள், தகவல்களை தரக்கூடியவர்கள். மேலும் கல்லூரியின் அனுமதிகளையும் எந்தவித சிரமமும் தாமதமும் இன்றி இவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

✌✌✌

கல்விசார் கண்காட்சிகள் :-
இந்தியாவில் இருந்து கல்லூரிகளின் பிரதிநிதிகள் நேரே வந்து ஒரே இடத்தில் தமது கல்லூரிகளினை பற்றி விளக்கி கூறும் சந்தர்ப்பம். மாணவர்களினையும் பெற்றோர்களினையும் பொறுத்தவரை இது ஓர் அருமையான சந்தர்ப்பம் என்றே கூறலாம். ஏனெனில் வேண்டிய தகவல்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதோடு கல்லூரிகளிடையே ஆன வேறுபாடுகளினை தெரிந்து கொள்ளலாம்.

### முகவரினை எந்த அளவிற்கு நம்பலாம்?

* ஒரு முகவருக்கான அடிப்படை தகுதி அவர் குறிப்பிட்ட கல்லூரியினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது முகவருக்கும் கல்லூரிக்கும் இடையிலான (MOU) ஒப்பந்தம் அல்லது அங்கீகாரம் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

* முகவருக்கான கல்வித் தகுதிகள் எதுவும் வரையறுக்கப்பட்டிருக்காவிடினும் முகவரானவர் ஓரளவு படித்தவராகவும் குறித்த மாணவர்களுடைய எதிர்பார்ப்பினை கல்லூரி பூர்த்தி செய்யக்கூடியதா என்ற தகவல் முதல் மாணவருக்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் செய்யக்கூடிய தகைமை அவசியம்.

### கட்டணம் செலுத்தும் நடைமுறைகள்.

பெரும்பாலான கல்லூரிகள் அனுமதிக் கட்டணம் செலுத்திய பின்னரே அனுமதிகள் வழங்குகின்றன. ஆகவே அனுமதிக்கட்டணங் களை நேரடியாகவோ / முகவர் மூலமாகவோ செலுத்தி அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம். ஏனைய கட்டணங்கள் முழுமையாகவோ / பகுதிகளாகவோ வங்கிக்கட்டளை (Demand Draft) மூலமாக எடுத்துச்சென்று கல்லூரியில் நேரில் செலுத்தலாம்.

### ஆங்கிலத்தின் அவசியம்.

O/L பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடையாத எவரும் இந்தியாவில் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்க முடியாது.

மேலை நாடுகளில் படிப்பதற்கு தேவையான IELTS,TOFEL போன்ற ஆங்கில திறன் சார் பரீட்சைகளின் அவசியம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் விசா (STUDENT VISA) பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை.

- கல்வி அமைச்சினால் வெளிநாட்டில் சென்று படிப்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட O/L,A/L சான்றிதழ்கள்.
- கல்லூரியின் அனுமதிச் சான்றிதழ்
- கல்லூரிக் கட்டணத்திற்கான DD எனப்படும் வங்கிக்கட்டளை (Demand Draft). (இது மாணவரின் நிதி நிலமை திருப்திகரமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக)

இந்த மூன்று ஆவணங்களும், விசா விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படும் இடத்து ஒரு வார காலத்திற்குள் விசாவினை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த இதழில் இந்தியாவில் கல்வி கற்பது தொடர்பான அடிப்படைத் தகவல்களை பார்த்தோம். அடுத்த இதழ் தொடக்கம் இந்தியாவில் கற்கக்கூடிய அனைத்து விதமான கற்கைநெறிகளை ஒவ்வொன்றாக விரிவாகப் பார்ப்போம்.


இந்தத் தொடர் சம்பந்தமாக கேள்விகள், சந்தேகங்கள் ஏதாவது இருப்பின் வழிகாட்டி "இந்தியாவில் உயர் கல்வி" என்று தலைப்பிட்டு அனுப்பினால் அவற்றுக்கான பதிலினை அடுத்த இதழில் பிரசுரிக்கக்கூடியதாக இருக்கும்.

தொடர்பு முகவரி
யாழ் வீதி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்

இயக்குனர்
V4 Educational Consultancy




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்கல்வி உலகின் நவீன பரிமாணம்

அனைத்து மாணவர்களும் கல்வியின் பின் சிறந்த வேலைவாய்ப்பையே எதிர்பார்க்கின்றனர். எனினும் ஏராளமான மாணவர்கள் உயர்கல்வியின் பின்னர் திருப்திகரமான தொழில் ஒன்றைப் பெறுவதில் சவால்களை எதிர்நோக்குகின்றனர். இதற்குப் பிரதானமான காரணம் தொழில் தருநர்களின் எதிர்பார்ப்புக்கள் காலத்துக்குக்காலம் மாற்றமடைகின்றமை ஆகும் மாணவர்கள் தமது உயர்கல்வியை தீர்மானிக்கும்போதே சமகாலத்து தொழிற்சந்தையின் போக்கினை அறிந்திருக்கவேண்டும். அதற்கு ஏற்ற வகையில் உயர்கல்வி தொடர்பான முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.

எனது 5 வருட விரிவுரையாற்றும் அனுபவத்தில் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மாணவர்களை அவர்களின் தொழில்சார் இலட்சியங்களை நோக்கிய வெற்றிகரமாக உயர்கல்வி பாதையில் வழிப் படுத்துவதில் பெற்ற சிறந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்வதே நான் இத்தொடர் கட்டுரை எழுதுவதன் நோக்கமாகும். ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் க.பொ.த சாதாரண தரத்தின் பின் எடுக்கப்படும் முடிவு வாழ்க்கையை தீர்மானிக்கும் ஒன்றாக அமையும். ஆனால் பெரும்பாலான பெற்றோர்களும் மாணவர்களும் இம் முடிவுகளை எடுக்கும் பொழுது நிகழ்கால தொழில் வாய்ப்புகள் வாழ்க்கை முறைகள் பற்றிய தகவல்களை தேடி அலசி ஆராய்வதில்லை. இதன் காரணமாக எடுக்கப்படும் பிழையான உயர் கல்வி சார் முடிவுகள் மாணவர்களின் எதிர்காலத்தை முடக்கி விடுவதாக அமையும்.

எனவே இந்த தொடர் கட்டுரை யானது, இன்று பிரலமாக இருக்கும் உயர்கல்வி வாய்ப்புக்களைப் பற்றியும் அவற்றுடன் தொடர்புபட்ட தொழில் வாய்ப்புக்களையும் தெளிவுபடுத்தும். இது மாணவர்கள் தெளிவான முடிவுகளை எடுத்து தமது தொழில்சார் இலட்சியங் களை அடைய வழிவகுக்கும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V4 EDUCATIONAL CONSULTANCY

V4 Educational Consultancy we 4 you

Catalyst for your higher studies

**UK Border Agency** இனால்
ஏற்றுக்கொள்ளப்பட்ட **IELTS ,KET** போன்ற
ஆங்கில பாடநெறிகள் எம்மால் கற்பிக்கப்படுகின்றன.
மேலும் A1,B1,B2 ஆகிய பாடநெறிகள் மற்றும்
சக நிறுவனத்தில் பரீட்சை எடுப்பதற்கான ஒழுங்குகள்
எம்மால் செய்து தரப்படும்.



- MEDIA
- ENGLISH
- BUSINESS
- COMPUTING
- ENGINEERING
- FASHION & DESIGN
- TRAVEL & TOURISM

BA, BIB, LLB,
MSc Finance & Development,
MSc Strategic Marketing ,
Msc Accounting , ACCA,
CIMA, MSc Fashion
Design & Luxury Management



மற்றும் பல பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

## எமது சேவைகள்

- விரைவானதும் நிறைவானதுமான சேவை
